## <u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S. No.637/2023 Date : 01.07.2025
பெயர் : கோதண்டன் வாசா 2

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். இவ்வழக்கில் யாருக்காக சாட்சி அளிக்கிறேன் என்றால் அமுதா என்பவருக்காக சாட்சி அளிக்கிறேன். வாதி அமுதாவை எப்படி தெரியும் என்றால் அவர் என் ஊர் என்பதால் தெரியும், எனது தாயார் ராஜம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. எனது தாயார் காசி என்பவரிடம் இருந்து சொத்தை கிரையம் வாங்கிய போது காசி என்பவருக்கு எவ்வகையில் பாத்தியம் ஏற்பட்டது என பத்திரம் கொடுத்தாரா என்றால் இல்லை. காசி என்பவருக்கு சொத்து எவ்வகையில் சொந்தமானது என எவ்வாறு என்று தெரிந்துகொண்டீர் என்றால் அச்சொத்து அரசுக்கு சொந்தமானது என்பதால் தனிநபர் பெயரில் பத்திரம் பட்டா கிடையாது மேற்படி சொத்திற்கு காசி வரி செலுத்தியுள்ளாரா என்றால் கிடையாது. எனது தாயார் பெயரில் சொத்து வரி செலுத்தியுள்ளீரா என்றால் இல்லை. சொத்தின் புல எண் தெரியாது கதவு எண் தெரியுமா என்றால் எண் 7 இருக்கும். மேற்படி சொத்து எந்த தெருவில் அமைந்தள்ளது என்றால் மாரியம்மன் கோயில் தெரு. தாவா சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது**

**மறுவிசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.